REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 20உ வெள்ளி (5—8—55) ★ ★ வெளியீடு: ஆடி 21உ சனி (6—8—55) [இதழ் 48

பெண்களின் பிறப்புரிமை!

"பெண்கள் க்ஷேம நல அதிகாரிகள், வேலை செய்வதைக் காட்டிலும், தங்களை அதிகமாக அலங்கரித்துக்கொள்கின்றனர்,"

—என்று ஆந்திர சட்டசபையில் பேசிய சே. வேம ரெட்டி என்பவர் குறிப்பிட்டார்.

உடனே, அம்மன்ன ராஜா என்ற பெண் உறுப்பினர் சீறிட்டு எழுந்து, அந்த உறுப்பினர் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு விரைந்து சென்று, அவர் பேசிக்கொண்டிருந்த 'மைக்ரா போனை' பிடுங்கிக்கொண்டு தான் பேச முயன்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'இரண்டாவது திட்டத்தில் ஆந்திராவின் பங்கு 250 கோடி ரூபாயா?'

'அதிகம்! அதிகம்! குறைத்துப் போடு'

இந்தியப் பேரரசு ஆணை இடுகிறது!

ஆந்திர அமைச்சர் டில்லி விரைகிறார்!

காளா வெங்கிடராவின் ஐயம் மெய்யாகிவிட்டது!

கர்னூல், ஆக. 4—

இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென, ஆந்திர சர்க்கார் தயாரித்து அனுப்பிவைத்திருந்த நகல் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகையை மேலும் குறைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசாங்கம், ஆந்திர சர்க்காருக்குக் கட்டளையிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மத்திய சர்க்காரிடமிருந்து, நேற்று இரவு தமக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாயும், ஆந்திரா தனது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவை மேலும் சுருக்கிக்கொள்ள வேண்டுமெனக் கோரப்பட்டிருப்பதாயும், ஆந்திர சட்டசபையில் திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே தயாரித்துள்ள திட்டத்தை, தான் டெல்லிக்கு எடுத்துச் சென்று திட்டக் குழுவுடன் விவாதிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர மாநிலத்தின் பல்வேறு இலாகா தலைவர்களும் முதலில் சுமார் ரூ. 500 கோடி அளவுக்குத் திட்டத்தைத் தயாரித்திருந்தனர்

பின்னர், திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டி விவாதித்த பின், திட்டத்தின் அளவு ரூ. 244.43 கோடிமதிப்புக்கு குறைக்கப்பட்டது; பாதிக்குமேல் குறைக்கப்பட்ட அந்தத் திட்டம் தான் சட்ட சபையில், விவாதத்திற்கு வைக்கப்பட்டது.

'இந்தத் திட்டத்தையும் சுருக்க வேண்டும்,' என்று, இந்திய சர்க்கார் கோரியிருப்பது, ஆந்திர சர்க்கார் வட்டத்தில், அதிர்ச்சியை யூட்டியிருக்கிறதாம்.

'இனிமேலும் திட்டத்தைக் குறைக்க இயலாது,' என்று கூறி, 'இதனையே ஏற்றுக் கொள்ளவேண்டும்,' என்று, ஆந்திர சர்க்கார், திட்டக்குழுவிடம் வற்புறுத்துவார்கள் என்று கூறப்படுகிறது.

நகல் திட்டம் பற்றி சட்ட சபையில் விவாதிக்கப்பட்டபோது, மாநிலத்தைத் தொழில் மயமாக்குவதற்கான குறிப்பான திட்டங்கள் ஏதும் இல்லை என்றும், தொழில் துறையில் வேறெல்லா மாநிலங்களையும் விட ஆந்திர மாநிலம்தான் மிகப் பின் தங்கியிருக்கிறது என்றும் பல உறுப்பினர்கள் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

குறிப்பு:— 'நமது தொழில் திட்டம், முதல் முதலாக ரூ. 800 கோடி உத்தேச செலவில் துவக்கப்பட்டதாகும்; ஆனால், அது படிப்படியாகக் குறைந்து, ரூ. 200 கோடியில் வந்து நிற்கிறது; இதே தொகையில் நிலைத்திருப்போமேயானால், அதுவே நம்மை நாமே பாராட்டிக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்' என்று, ஆந்திர திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ், சென்னையில் உள்ள ஆந்திர வர்த்தகர்கள் சங்கத்தில், கடந்த ஜூலை 16-ல் தனக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றின்போது குறிப்பிட்டார்.

'இந்தியைக்கூட ஏற்றுக்கொள்ள வேண்டாம்!'

'எங்கள் ஆதிக்கத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள்'

கவர்னர் பிரகாசாவின் சாகசமும்-சமாதானமும்

சென்னை, ஆக. 4—

"இந்தி, வட நாட்டில் பேசப்படும் ஒரு மொழியாக இருப்பதால், இந்தியை நுழைத்துவிட்டு, அதன் பின்னாலேயே, தென்னாட்டின் மீது வட நாட்டவரின் ஆதிக்கத்தையும் நாங்கள் நுழைப்பதாக சிலர் அஞ்சுகிறார்கள்; அந்த மாதிரியான எண்ணம் எதுவும் வட நாட்டவருக்கு இல்லை என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்;

"வட நாடு உங்களை மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளக்கூடியதெல்லாம், அவ்வப்போது (வட நாட்டிலிருந்து) அனுப்பப்படுகிற கவர்னரை (வட நாட்டு ஆதிக்கச் சின்னத்தை) ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதுதான்—வேறெதுவுமல்ல,"

—என்று சென்னை கவர்னர் பிரகாசா, மாநிலக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினைத் துவக்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நான் கடந்த மூன்றாண்டு காலமாக தமிழ் நாட்டின் சரித்திரத்தையும், பாரம்பரியத்தையும் மிகக் கவனமாகக் கற்று வருகிறேன். நான் உணருவதெல்லாம் — 'வடநாட்டவர்தான், தென்னாட்டிலிருந்து ஏராளமாகக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களே தவிர, தென்னாட்டவர், வடநாட்டிலிருந்து எதும் கற்றுக்கொள்வதற்கு இல்லை,' என்பதுதான்;

"ஆங்கிலம் படிப்படியாக நாட்டிலிருந்து நழுவிக்கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; நான், அந்த நிலைக்காக மிகவும் வருந்துகிறேன். ஏனெனில், நான் ஆங்கிலக் கல்வியே பயின்றேன்; மேலும், பல்வேறு விஷயங்களையும், விஞ்ஞானக் கலைகளையும் பற்றிய அறிவைப் பெறத் துணை செய்யும் வலிமை மிகுந்த மொழி ஆங்கிலம்;

"இந்தி 'இந்தியாவின் அலுவல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது—'அது வளம் மிகுந்தது—வலிவு பெற்றது' — என்பதால் அல்ல; ஆனால், 'இந்தியாவில் உள்ளோரில் பாதிபேருக்கு மேல் அந்த மொழியைப் பேசுபவர்களாயிருக்கின்றனர்,' என்ற வாய்ப்பினால்தான்;

"இந்தி தங்கள் மீது திணிக்கப்படுவதாக இங்கு பரவலான எண்ணம் நிலவுகிறதென்பதால், நான் வற்புறுத்தித் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன் — 'ஒரு மொழி பேசுவோர் மீது, இன்னொரு மொழியைத் திணிப்பது என்ற எண்ணமே இருக்க முடியாது;'

(4-ம் கலம் பார்க்க.)

'இந்தியைத் திணிக்க வடநாட்டவர் தந்திரமாக முயற்சிக்கின்றனர்'

'சென்னை மாநிலம் இந்தி மொழி பற்றி திட்டமான முடிவு கூற வேண்டும்'

மேல் சபையில் டி. எம். நாராயணசாமி இடித்துரை

சென்னை, ஆக. 3—

"வட்டார மொழிக்கான தனிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதுதான்; ஆனால், அதே நேரத்தில், இந்தி மொழி குறித்தும் ஆலோசிக்க வேண்டிய தருணம் இதுதான்;

"இந்திய அரசாங்கம், மத்திய 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' ஆகியவை, பரீட்சை மொழியாக இந்தியை மேற்கொள்ளும் திட்டம் குறித்து, சென்னை அரசாங்கம் ஒரு உறுதியான முடிவை மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தி திணிக்கப்படவில்லை என்பது பித்தலாட்டமே!'

'திராவிடருக்கு ஆங்கிலத்தைப்போல இந்தியும் அன்னிய மொழியே!'

மேல் சபையில் டாக்டர் லட்சுமணசாமி முழக்கம்

"ஆங்கிலத்தில் பேசும் பழக்கமுடையவர்களில் பெரும்பாலானவர், மக்கள் சபையில், இப்பொழுது இந்தியில் பேசுவதாக அறியவருகிறேன்; அதன் பலனாக, நடைபெறும் விவாதத்திற்குத் தங்களுடைய சிறந்த கருத்தை, தென்னாட்டுப் பிரதிநிதிகளால் அளிக்க முடியாமற்போகிறது; 'அங்கு சென்றால் இந்தியைக் கற்றுக்கொள்ள இயலும்,' என்பதற்காகவா, நாம் மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம்? ஆங்கிலத்தில் பேசத் தெரியாதவர்கள் இந்தியில் பேசுவதாக இருந்தால், அதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். அரசியல் சட்டப்படி 1965-ம் ஆண்டு வரை, இரண்டு மொழிகளும் கையாளப்பட வேண்டும். உண்மை நிலை இவ்வாறு இருக்கும்பொழுது, 'இந்தியைத் திணிக்க எந்த இயக்கமும் நடைபெறவில்லை,' எனக் கூறப்படுவது, நிச்சயமாக உண்மைக்குப் புறம்பானதேயாகும்."

"இதுபற்றிய ஆராய்ச்சி பல்கலைக் கழகங்களின் குழுவால் மேற்கொள்ளப்பட்டு, 'இந்தி திணிக்கப்படமாட்டாது,' என்று, அது தகவல் கொடுத்திருக்கிறது; ஆனால், ஒரு கிழமைக்குமுன், இந்தித் திணிப்பு குறித்து, தங்கள் பதிலைக் கூறுமாறு பல்கலைக் கழகங்களுக்கு நினைவூட்டும் அஞ்சல் கிடைத்துள்ளது. பல்கலைக் கழகங்களின்மீது இந்தி எவ்வாறு திணிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்."

(4-ம் பக்கம் பார்க்கவும்)

பாக். கவர்னர் - ஜெனரலாக இஸ்கந்தர் மீர்ஜா?

நாளுக்கு நாள் மோசமாகிவரும் கவர்னர்-ஜெனரல் குலாம் முகம்மதின் உடல்நிலை குறித்து, பாக். மந்திரி சபை விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு முக்கியமான அறிவிப்பு, எந்த நேரத்திலும் தரப்படலாம் என்று அறியப்படுகிறது.

குலாம் முகம்மதுவின் இடத்திற்கு இஸ்கந்தர் மீர்ஜாவின் பெயர் அடிபடுகிறதாம்!

அணுகுண்டு சோதனை

மீண்டும் ரஷ்யா நடத்துகிறதாம்!

கடந்த சில நாட்களாக, ரஷ்யா மீண்டும் அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை நடத்துவதாக அமெரிக்க அணுசக்திக் குழு அறிவித்திருக்கிறது.

கோவா போராட்டம்

மக்கள் சபை, சட்ட சபை உறுப்பினர்கள் ஈடுபடுவர்?

கோவா போராட்டத்தில் ஈடுபட ஆறு மக்கள் சபை உறுப்பினர்களும், இரண்டு சட்ட சபை உறுப்பினர்களும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5-8-'55 வெள்ளி

தெளிவும்—துணிவும் ஏற்படுமா?

இந்தியத் துணைக் கண்டத்தைத் தொழில் மயமாக்குவதில் இந்தியப் பேரரசு நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. வடநாட்டில் புதுப்புதுத் தொழில்களை நிர்மாணிப்பதில் இந்தியப் பேரரசிற்கு இருக்கும் அளவு அக்கரை, தென்னிந்தியா விஷயத்தில் இருக்கவில்லை.

இதன் விளைவாக ஏற்கனவே தொழில் வளத்தில் முன்னேற்றம் பெற்றுள்ள வடநாடு, மேலும் வளமிகுந்ததாக மாறுகிறது. அதே நேரத்தில், முன்னரே வளங்குன்றிக் கிடந்த தென்னாடு, தொழில் வளத்தில் தேய்ந்து நலிகிறது.

வடநாடு தொழில்புரியாகவும், தென்னாடு தொழிலற்ற பாலைவனமாகவும் காட்சி அளிக்கின்றன.

வடநாட்டில் இயங்கிவரும் பலவிதமான தொழில்களுக்குத் தேவைப்படும் இன்றியமையாத மூலப் பொருட்களைத் தந்துதவும் வெறும் விவசாயத் தரணியாக, திராவிடம் மாறிக்கொண்டே வருகிறது.

எனவே, வாழ்க்கையின் சுவையை வடநாட்டு மக்கள் அனுபவித்து மகிழவும், அதே காலத்தில் தென்னாட்டு மக்கள், வாழ்க்கையின் சுமையைத் தாங்க முடியாமல், வேலையின்மைக்கும், தொத்து நோய்களுக்கும், இளமை இறப்புக்கும், பட்டினி பஞ்சத்திற்கும் பலியாகித்தவிக்கவுமான துன்ப நிலை இருக்கிறது.

இந்த ஓரவஞ்சனைப் போக்கை, இந்தியப் பேரரசு கைவிட வேண்டும். இல்லையேல், திராவிட நாடு திராவிடர்களுக்கு ஆக்கப்படுவதில்தான், திராவிடர்களின் எதிர்கால வாழ்க்கை நலத்திற்கு விமோசனம் ஏற்பட முடியும்.

இவ்வாறு, உள்ள நிலையை, உள்ளவாறு நாம் கூறுகிறோம்—கூறியும் வருகிறோம்.

நமது குற்றச்சாட்டை மெய்ப்பிக்கவும் வலியுறுத்தவும், மாற்றாரும் மறுக்க முடியாவண்ணம், ஏராளமான எடுத்துக் காட்டுகளையும், ஒருமுறைக்குப் பலமுறை திட்டவட்டமாக எடுத்துக் காட்டியும் வந்துள்ளோம்.

இதற்கு தக்கதோர் சான்ருக, இந்தியப் பேரரசு தீட்டி, கடந்த நான்கு ஆண்டுகளாக செயலாற்றியும் வரும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், வடநாட்டிற்கும், தென்னாட்டிற்கும் ஒதுக்கப்பட்டுள்ள முதலீட்டுத் தொகையில் காணப்பெறும் வேற்றுமையைச் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். கல்லில் செதுக்கிய அந்த உண்மையை இதுவரை மறுத்துக் கூறத் துணிந்த மாற்றார் இல்லை.

கவர்னர் பிரகாசா, "'வடநாட்டிற்கு வாழ்வளிக்கப்படுகிறது—தென்னிந்தியா வஞ்சிக்கப்படுகிறது' என்ற ஒரு கருத்து, தென்னகத்தில் பரவலாக இருக்கிறது," என்று எத்தனையோ முறை எடுத்துக் கூறி இருக்கிறார்.

நடைமுறை உண்மையை ஒரேயடியாக மறுக்க முடியாமல், இந்தியப் பேரரசின் அமைச்சர்கள், நமது குற்றச்சாட்டில் உள்ள பரிசுத்தமான உண்மையை ஒப்ப மனமில்லாமல் ஒப்பி, அதற்குப் பொருத்தமற்ற மாற்றங் கூற முயற்சித்தும் உள்ளனர். அவர்கள் பலரும் கூறிய சமாதானம், அவர்கள்மனச்சாட்சிக்கேகூட திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஆவடி மாநாட்டின் வரவேற்பாளராக இருந்த அம்புஜம் அம்மையார், இந்தியப் பேரரசின் இப்பாரபட்சப் போக்கை எடுத்துக்காட்டி, உடனடியாகப் பரிகரிக்க வேண்டுமென கோரியும் உள்ளார்.

சென்னை காங்கிரஸ் அமைச்சர்களில் சிலரும், இந்தியப் பேரரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை மனம் நொந்து இயம்பியும் உள்ளனர்.

மக்கள் சபையில், திராவிடத்திலிருந்து சென்றுள்ள மக்கள் சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் இயல்பிற்கும், இந்தியப் பேரரசிடமிருந்து அவர்களில் சிலர் எதிர்பார்த்துக் கிடக்கும் சலுகைகளின் தன்மைக்கும் ஏற்ப, தொழில் துறையில் தென்னிந்தியாவை ஒதுக்கிவரும் இந்தியப் பேரரசின் இழிதன்மையை எடுத்துக் கூறியுள்ளனர். காரசாரமாகக் கண்டித்துப் பேசினவர்களும் உண்டு.

பல்வேறு துறையில் ஈடுபட்டுவரும் இத்துணைப் பேர்களும் கூறிவரும் ஒன்றை, நாம் எடுத்துக்காட்டும் வேளையில் மட்டும், காங்கிரஸ் அமைச்சர்களுக்கு சீற்றம் பொங்கி எழுகிறது. குதிக்கின்றனர்—நம்மைச் சுட்டுச் சாம்பலாக்கிடும் வல்லமை பெற்றுள்ளவர்கள் போன்று, மீசையை முறுக்கி, கண்களை உருட்டி, முஷ்டியை நமது முகத்திற்கு நேராகத் தூக்கிப் பிடிக்கின்றனர். இழிரகமாக நம்மைத் தூற்றவும் செய்கின்றனர். முன்னாள் தங்கள் வாயாலேயே கூறிய உண்மையை, 'நான் எப்போது கூறினேன்' என மறுத்து வினவும் பாதகத்தையும் புரியக் கிளம்பிவிடுகின்றனர்! இடத்தின் இயல்பு!—அவர்களை அதற்காகக் குறை கூறி பயன் என்ன?

சென்னை காங்கிரஸ் அமைச்சர்களின் நெஞ்சிலே தைக்கும் வண்ணம், உள்ளத்திலே உறுத்தும் வண்ணம், பார்வையிலே படும் வண்ணம், கருத்திலே படியும் வண்ணம், மைசூர் அரசாங்கத் தொழில் அமைச்சர் கனம் சென்னபாசப்பா, மனம் உடைந்து, நெஞ்சு நெக்கு நெக, தொழில் துறையில் தென்னிந்தியா பெற்றுவரும் அவக்கேட்டைக் குறித்து விளக்கி இருப்பதை எடுத்துக் காட்டுகிறோம். அதைக் கண்ட பிறகாவது, தெளிவும்,—இப்படி ஒரு அவலநிலை நீடிக்கலாமா என இந்தியப் பேரரசை, தலை நிமிர்ந்துத் தட்டிக் கேட்கும் துணிவும், நமது சென்னை மாநில அமைச்சர்களுக்கு ஏற்படுமா?

மைசூர் தொழில் அமைச்சர் கனம் சென்னபாசப்பா, நமது கழக உறுப்பினருமல்ல—திராவிட இயக்கத்தில் இரண்டறக் கலந்திருப்பவருமல்ல; நமது மாநில அமைச்சர்களைப் போன்றே, அவரும் ஒரு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருப்பவர்தான்.

அவர் கூறுகிருர்:—

'தொழில் வளர்ச்சித் திட்டங்களில், தென்னிந்தியா இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கிடக்கிறது'-என்று!

பிறர் புகமுடியாத படுக்கை அறை பஞ்சணையில் அயர்ந்து உறங்கிக் கொண்டு, வாய் குளறும் வேளையில், மேற்குறித்துள்ள உண்மையை அவர் கூறிடவில்லை!

காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில், நல்ல விழிப்புடன் இருந்த வேளையில் தான், 'தொழில் வளர்ச்சித் திட்டங்களில், தென்னிந்தியா, இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கிடக்கிறது,' என்ற உண்மையை, குறிப்பிட்டுள்ள பொருளை மட்டும் ஐயத்திற்குத் துளியும் இடமின்றி கொடுக்கும் சொற்களைத் தேர்ந்தெடுத்து, கனம் சென்னபாசப்பா கூறி இருக்கிருர்!

அமைச்சரின் மனப்போக்கும், கண்ணோட்டமும், சொல் நாட்டமும் மட்டுமே அப்படி இருக்கவில்லை; கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலோரான காங்கிரஸ் ஊழியர்களின் உள்ளக்கிடக்கையும் அமைச்சர் கருத்துக்கு, மேலும் உரமூட்டுவதாகவே இருந்தும் இருக்கிறது.

'நாட்டின் இப் (தென்னிந்தியா) பகுதியின் தொழில், வர்த்தகம், போக்குவரத்து ஆகியவற்றின் அபிவிருத்தியில், இந்தியப் பேரரசு கருத்தைச் செலுத்தவில்லை' என்பதற்காக, காங்கிரஸ் ஊழியர்கள் தங்கள் 'ஏமாற்றத்தை'த் தெரிவித்துள்ளனர்.

தென்னிந்தியாவின் முன்னேற்றத்தில் இந்தியப் பேரரசு அக்கரை காட்டவில்லை; தொழில் வளத்தைப் புறக்கணித்து வருகிறது—என்று வெளிப்படையாகக் கூறுவதற்கு, எத்தகைய கண்ணோட்டத்தை காங்கிரஸ் அமைச்சர் கனம் சென்னபாசப்பா பெற்றிருக்கிருரோ, அதே கண்ணோட்டத்தை மைசூர் காங்கிரஸ் ஊழியர்களில் பெரும்பான்மையினரும் பெற்றிருக்கின்றனர். இது அற்ப விஷயமல்ல. பெரும் பொருளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சிறப்பான போக்காகும்.

மைசூர் தொழில் அமைச்சர் ஒருவர் மட்டுமே, இந்தியப் பேரரசின் போக்கு குறித்து அத்தகு முடிவிற்கு வரவில்லை—அம்முடிவை வெளிப்படையாகக் கூறிடவும் இல்லை—அந்த முடிவை—அதை வெளிப்படையாகக் கூறிடும் போக்கை—ஒருவர் அல்ல—பலர்—அதிலும்—காங்கிரஸ் ஊழியர்களே பெற்றிருக்கின்றனர்.

தனித்த ஒருவராக அந்த அமைச்சர் அத்தகு மனப்போக்கைக் கொண்டிருக்கவில்லை—கட்சி ஊழியர் பலரின் ஒருமித்த போக்கு, அவருக்கு அரணாக அமைந்து இருக்கிறது.

இது, ஒரு எரிமலைக்கு ஒப்பாகும்—புகையத் தொடங்கி இருக்கிறது—வெடித்தே தீரும்—நாளை இல்லையானாலும்—மேலும் சில நாளைக்குள்!

இது குறித்து, நாளை மேலும தொடர்ந்து எழுதுவோம்.

கல்வி வளர்ச்சியில் வர்த்தகக் கழகங்கள் அக்கரை!

ஏன் கொள்ளவேண்டுமென்பதை அமெரிக்கர் விளக்குகிருர்

"அமெரிக்க வர்த்தகக் கழகம், கல்வி வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்துகிறது; கழகத்தின் சார்பில் 1,700 குழுக்கள் கல்வித்துறையில் வேலை செய்கிறது; இந்தக் குழுக்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை பள்ளி நிர்வாகிகளையும், பெற்ருேர்களையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்கின்றன;

"அமெரிக்காவில் நாங்கள், 'கல்வி வளர்ப்பது ஒரு நல்ல வியாபாரம்,' என்று கண்டிருக்கிருேம்;

"எங்கு நல்ல கல்வி இருக்கிறதோ அங்கு வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்பதை ஒரு 'சர்வே' மூலம் அறிந்துள்ளோம்; எனவே, வியாபார நோக்குடனேயே அமெரிக்க வர்த்தகர்கள் கல்வி வளர்ச்சியில் மேலும் மேலும் அதிக அக்கரை காட்டுகின்றனர்;

"மக்களுக்கு ஒரு கூட்டுக் கல்வி முறைக்காகவும், மருத்துவ வசதிகள் தருவதற்காகவும், வர்த்தகர்கள் தங்களின் இலாபத்தில் ஐந்து சதவிகிதம் தரவேண்டும் என்கிற ஒரு கோரிக்கை இப்போது அமெரிக்காவில் எழுந்துள்ளது;

'அமெரிக்க வர்த்தகர்களுக்கு இலாபம் சிறிதளவே கிடைப்பதால், உற்பத்தியை அதிகரிப்பதில் தொழிலாளர்களுக்கு உற்சாகம் அதிகமிருக்கிறது; ஏனெனில், அவர்களுக்கு அதிகமான இலாபம் கிடைக்கும்; இது ஒரு புதிய அம்சமாகும்,"

என்று அமெரிக்க வர்த்தகக் கழகத் தலைவர், தென்னிந்திய வர்த்தகக் கழகத்தவர் தந்த வரவேற்பின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

★

மாணவர் தொகை பெருகுகிறது!

கல்வித்துறையில் அமெரிக்க நிலைமை

இந்த ஆண்டு அமெரிக்கப் பள்ளிக் கூடங்களில் 3,62,00,000 மாணவர்கள் சேருவார்களென்றும், 1960-க்குள் $4\frac{1}{2}$ கோடி மாணவராவது சேருவார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

"அரசியல் கொள்கை எவ்வாறு இருந்தாலும், உலகத்திலுள்ள நாடுகள் யாவும், 'தத்தம் மக்கள், உலகம் முன்பு கண்டிராத அளவு கல்வி பெறவேண்டும்,' என்று முனைந்துள்ளன," என்பதையே, இதுபோன்ற புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றனவாம்!

அமெரிக்கப் பள்ளிகளின் பாடத் திட்டங்களைப் பெற்ருேரும், ஆசிரியரும் திருத்தி அமைக்கின்றனராம்!

அமெரிக்காவில், கலை பயிலவும்—விஞ்ஞானம் பயிலவும் சேருவோர் தொகை 20 ஆண்டுகளுக்கு முன் $5\frac{1}{2}$ லட்சமாக இருந்ததாம்; இன்று 12 லட்சமாக உள்ளதாம்!

'சர்க்கார் தொழில் நிறுவனங்களில் புதிதாக உபயோகிக்கப்படும் இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் ஆகியவை சம்மந்தப்பட்ட மட்டில், அவை தசாம்ச முறையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும்,' என்று, தசாம்ச நிறுத்தல்—முகத்தல் அளவை முறை நிரந்தரக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

கைத்தறி நெசவுக்கு ரூ. 100 கோடி!

இரண்டாம் திட்டத்தில் ஒதுக்கக் கோரிக்கை

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவுகாலத்தில் சுமார் 300 கோடி கெஜம் கைத்தறித் துணி நெய்ய வேண்டுமென இலட்சிய எல்லை வகுக்கும் திட்டம் ஒன்றை அகில இந்திய கைத்தறிபோர்டு,டில்லியில் நடைபெற்ற மாநாட்டில் திட்டம் ஒன்று தீட்டி, அதை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமெனக் கோரியிருக்கிறது.

இந்த நகல் திட்டம் சுமார் ரூ. 100 கோடி மதிப்புடையது.

'திட்டத்தை நிறைவேற்ற சுமார் 60 கோடி மானியமாகவும் ரூ 40 கோடி கடனுகவும், தரப்படவேண்டும்' என்று கோரப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கென மூலதனச் செலவாக ரூ. 21.78 கோடியும், கழிவுத் தொகையாக ரூ 15 கோடியும், கூட்டுறவு சங்கங்களில் அங்கம் வகிக்கும் நெசவாளர்களுக்கென சேமிப்பு நிதி சேர்க்க ரூ 11 கோடியும், நெசவாளர்களுக்கென குடியிருப்பு காலனிகள் அமைக்க ரூ. 19 கோடியும் செலவிடவேண்டுமென திட்டம் கோருகிறது.

பாக்.-ஆப்கன் கொடி தகராறு

நெருக்கடி குறைவதாகத் தகவல்

"ஆப்கன் — பாகிஸ்தானுக்கிடையே கொடிப் பிரச்சினையின் காரணமாக எழுந்துள்ள தகராறுகள், வரவர 'குறுகிக்கொண்டு'—நெருக்கடி குன்றிக்கொண்டே வருகிறது," என்று, செய்தி ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பாகிஸ்தானுக்கு விரோதமாக காபூல் பிரச்சாரம் செய்யாதிருக்குமானுல், ஆப்கன்—பாக் தகராறுகளுக்குப் பைசல் காணும் நிலைமை சாத்தியமானதே," என்றும் அச் செய்தி குறிப்பிடுகிறதாம்.

பாகிஸ்தான்—ஆப்கன் எல்லையிலிருந்து ஆப்கன் துருப்புகள் வெளியேற்றப்பட்ட நடவடிக்கையானது 'திருப்திகரமான செய்தி அறிவிக்கும் ஒரு அடையாளம்' என்று அதிகாரவட்டங்களில்கூறிக் கொள்ளப்படுகிறதாம்.

புதுவகை மருந்துகள்

இந்தியாவில் தயாரிக்க ஏற்பாடு

புனு, ஆக. 3—

'ஸ்டிரெட்டோமைசின்' என்ற மருந்துகள், முதன் முதலாக இந்தியாவில், இந்துஸ்தான் நிறுவனம் ஒன்றினுல் தயாரிக்கப்படுமாம்.

இந்த நிறுவனம், மத்திய சர்க்காரின் மேற்பார்வையில் நடைபெறுவதாயும், பிம்பிரியிலுள்ள பெனிசிலின் தொழிற்சாலையில் ஏற்கனவே இந்த நிறுவனத்தார் 'பெனிசிலின்' உற்பத்தி செய்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிம்பிரியில், மற்ருெரு வகையான 'குளோரமைசிடின்' என்னும் மருந்தும் தயாரிக்கப்படுவதற்கென ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்!

'மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கும் தொகை முழுவதும் செலவழிக்கப்பட முடியாததேன்?'

'திட்டங்களுக்கு இரும்புப் பொருட்கள் தேவையான அளவிற்கு கிடைக்காததேயாகும்'

'முடிக்கப்பட்ட வேலைகளுக்கு ஒப்புதல் தருவதில் தாமதம் ஏற்படுவதும் காரணம்'

தஞ்சை, ஆக. 3—

"தஞ்சை மாவட்டத்திற்கு, தல அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக இவ்வாண்டில் ரூ 7 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது; அந்தத் தொகை முழுவதும் அடுத்த மார்ச்சு திங்கள் முடியுமுன்னர், மேற்படி திட்ட வேலைகளுக்காகச் செலவிடப்பட்டாகவேண்டும். ஆனால் இதுவரையிலும் ரூ. 50,000 செலவிலேயே அபிருத்தித் திட்ட வேலைகள் நடைபெற்று இருக்கின்றன.

"இவ்வாறு 'ஆமை வேக'த்தில், இத்திட்ட வேலைகள் நடைபெறுவதற்கான காரணமெல்லாம், அவ்வேலைகளுக்குத் தேவையான இரும்பு, எஃகு போன்ற பொருட்கள் தேவைக்குக் குறைந்த அளவிலேயே வினியோகிக்கப்படுவதும், அந்த வேலைகளை துரிதமாகச் செய்து முடிப்பதினின்றும் எஞ்சினீயர்களைக் கட்டுப்படுத்தி சட்டங்கள் வகுத்திருப்பதும், செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு உடனடியாக ஒப்புதல் தரபடாமல், கால தாமதம் செய்யப்படுவதுமே ஆகும்."

இவ்வாறு, தஞ்சை மாவட்ட கலெக்டர், மாவட்ட திட்டக் குழுவின் கூட்டமொன்றில் பேசுகையில், மாவட்ட அபிவிருத்தித் திட்ட வேலைகளின் பிற்போக்கு நிலை பற்றிய காரணங்களை எடுத்துக் கூறுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், தல அபிவிருத்தித் திட்ட வேலைகளில் துரிதமான முன்னேற்றம் ஏற்பட மாவட்ட திட்டக் குழுவினரின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை என்றும், சென்ற ஆண்டிலும் இதுபோன்று, தல அபிவிருத்தித் திட்டத்திற்காகத் தரப்பட்ட தொகையில் ரூ 6 லட்சத்தைச் செலவு செய்யாமல் அப்படியே திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது மிக வருந்தத்தக்கதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நிழலின் அருமை வெய்யிலில் தானே தெரியும்?

ஸ்டிராஸ்பரோ, அக். 3—

ஸ்டிராஸ்பரோ எனும் நகர உதவி மேயர், நகர சுத்தித் தொழிலாளரின் தொழிலை மிகச் சாமானியமானது என்று எண்ணிக்கொண்டதால்; தாம், மூன்று நகர சுத்தித் தொழிலாளர்கள் செய்யக்கூடிய வேலையை ஒருவராகவே செய்து முடித்துவிட முடியும் என்று 'பகிரங்கமாக' அறைகூவல் விடுத்தாராம்!

அறைகூவலுக்குப் பின்னர், அதனைச் செயல் முறையிலும் காட்ட ஆரம்பித்துவிட்டார்.

உதவி மேயர், தமது சட்டையின் கைகளை மடித்துக்கொண்டு, கிரிக்கெட் பந்தாடுபவர்கள் அணிந்துகொள்வது போன்ற தொப்பியை அணிந்துகொண்டு, கையில் துடப்பம் ஒன்றை ஏந்திக்கொண்டு மூடப்பட்டுக் கிடந்த மார்க்கெட் ஒன்றின் ஒரு மூலையிலிருந்து பெருக்க ஆரம்பித்தாராம்!

'உதவி மேயர் தாம் விட்ட சவாலை எந்த அளவு திறமையுடன் நிறைவேற்றிவைக்கப் போகிறார்,' என்பதைக் கண்டறிய திரளான மக்கள் மார்க்கெட்டில் கூடியிருந்தனராம்.

துடப்பத்தைக் கையிலேந்திய அவர், மார்க்கெட்டின் ஒரு முனையிலிருந்து நசுங்கி அழுகிய பழங்கள், நாற்றமடித்துக் கொண்டிருந்த காய்கறிகள், வைக்கோல், காகிதக் குப்பைகள் ஆகியவற்றைக் கூட்ட ஆரம்பித்தாராம்!

இதனிடையில் அவரது அறைகூவலை ஏற்றுக்கொண்டு அதற்குப் பதில் சவால் விடும் முறையில் மற்றிரண்டு நகர சுத்தித் தொழிலாளர்கள், மார்க்கெட்டின் மறு கோடியிலிருந்து குப்பை கூளங்களைக் கூட்ட ஆரம்பித்தனராம் அவர்கள் பெருக்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளாக மார்க்கெட் சதுக்கம், குப்பை கூளங்கள் அகற்றப்பட்டுப் 'பளிங்கு' போல் காட்சியளித்ததாம்!

ஆனால் உதவி மேயர் தாம் குப்பை கூளங்களைக் கூட்டிவந்த சதுக்கத்தில் கால்பாகம்தான் சுத்தம் செய்யப்பட்டிருந்ததாம்; பாக்கி முக்கால் பாகமும் சுத்தம் செய்யப்படாமல் இருக்கவே, மேற்படி இரண்டு தொழிலாளர்களும் அவருடன் சேர்ந்துகொண்டு, பின்னர், விரைவில் அப்பகுதியையும் சுத்தம் செய்தனராம்!

மூன்று பேருடைய வேலையை தாம் ஒருவரே அதே காலத்திற்குள் செய்துமுடித்து விடுவதாகச் சவால்விட்ட அந்தப் பரிதாபத்திற்குரிய உதவி மேயரால், ஒரு தொழிலாளி செய்யக் கூடிய வேலையைக் கூட செய்ய முடியாதவராகித் தலை குனிய நேரிட்டதாம்!

'இந்தியர்களே, வெளியேறுங்கள்!'

இலங்கை மக்கள் சபையில் கூக்குரல்

"'வெள்ளையரே! இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்'— என்று, காந்தியாரின் ஆசியுடன் இந்தியர்கள் கூறினர்களே;—அதே நோக்கோடு, 'இந்தியர்களே! இலங்கையை விட்டு வெளியேறுங்கள்!'—என்று, இலங்கை ஏன் கூறக்கூடாது?"

என்று, இலங்கை முன்னாள் வர்த்தக மந்திரி ஆர். ஜி. சேனநாயகா மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதம மந்திரி கொத்தலாவலை பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் ஆட்சிபுரிந்த வெள்ளையர்களைக் காட்டிலும், இலங்கையில் உள்ள இந்தியர்கள் மோசமானவர்கள்; எவ்வாறெனில், இலங்கையைப் போன்ற ஒரு பின்தங்கிய நாட்டின் தொழில் வேலைகளை இலங்கை குடிமக்களிடமிருந்து அவர்கள் பறித்துக் கொள்கின்றனர்;

"இந்தியர்கள், இலங்கைக்கு நன்மை செய்வதற்கு மாறாக, தீங்கே இழைத்து வருகின்றனர்; அவர்கள், நாட்டை, எல்லா வழிகளிலும் ஏமாற்றி மோசம் செய்கின்றனர்;

"'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு,' என்று, இந்தியர்கள் கூறியிருக்கின்றனர்; அப்படி இருக்கும்போது, 'இலங்கையை விட்டு இந்தியரே வெளியேறுங்கள்,' என்று இலங்கையர் ஏன் கூறக் கூடாது என்பதற்கு, ஒரு காரணமும் எனக்குத் தெரியவில்லை."

★

வெளியேற்றபட்டோர் எண்ணிக்கை

புதுடில்லி, ஆக. 2—

"கடந்த மார்ச் 1 முதல் ஜூலை 23 வரை, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 662 என்று கூறப்படுகிறது;

"இலங்கையில் உள்ள இந்தியத் தொழிலாளரின் எண்ணிக்கை சுமார் 8,40,458 என்று 1953-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, மதிப்பிடப்பட்டிருக்கிறது; இவர்களில், 4,41,002 பேர் தேயிலை, ரப்பர், தென்னை தோட்டத் தொழில்களில் வேலையில் அமர்ந்திருக்கின்றனர்;

"துறைமுகங்கள், தொழிற்சாலைகள், ஆலைகள் முதலிய தொழில்களிலெல்லாம் எத்தனை இந்தியர்கள் வேலை செய்கின்றனர் என்பதற்கு விபரங்கள் இல்லை;

"வேலையில்லாத, பிறரை நம்பி வாழும் இந்திய இளைஞர், முதியோர் ஆகியோரின் எண்ணிக்கை 3,37,268 என்று கூறப்படுகிறது."

இந்தத் தகவலை பிரதமர் நேரு எழுத்து மூலம் கேள்வி ஒன்றுக்கு பதிலாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா விடுதலை இயக்கத்தில் இருவர் பலியாயினர்!

துப்பாக்கிப் பிரயோகத்தில் பலருக்குக் காயம்

சவந்தவாடி, ஆக. 3—

கோவா விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட இரண்டு ஆயுதமேதுமற்ற இந்தியத் தொண்டர்கள் போர்ச்சுகீசியப் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனத் தெரிய வருகிறது

அவர்களில் ஒருவர், மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பி கே. தோரட் எனப்படுபவர்; மற்றொருவர், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த நித்தியானந்த சாகா என்பவர்.

போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் மேலும் நான்கு தொண்டர்கள் பலமாகக் காயமடைந்துள்ளனராம்.

துப்பாக்கி ரவை ஒன்று ஆழமாக முதுகுப்புறத்தில் பதிந்து கொண்டிருந்தபடி நித்தியானந்த சாகா, வெங்குர்லாவில் உள்ள ஒரு கிறித்துவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், ஆனால் அவர், அன்று மாலையே உயிர் நீத்தார் என்றும் கூறப்படுகிறது.

காயப்படுத்தப்பட்ட நால்வரில் மூன்று பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுடைய நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்துபோன தோரட், சாகா ஆகியோரது சவங்கள் பெல்காமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனவாம்.

இரு கிராமங்களின் 'சுதந்திர' பிரகடனம்!

போர்ச்சுகீசியக் கோவா பிரதேசத்திலுள்ள மாயிம், சுர்லா என்ற இரு கிராமங்கள், தங்கள் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளதாக அறிவிப்பொன்று தெரிவிக்கிறது.

இந்தியாவில் மோட்டார் கார் உற்பத்தி, 1954 ஜனவரி—மார்ச் திங்களில் 3,785 ஆக இருந்தது; 1955 ஜனவரி—மார்ச் திங்களில், அது, 5,357 ஆக உயர்ந்துவிட்டது

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், நெல்லை மாவட்டத்தில் 16-8-55 முதல் 21-8-55 வரையில் ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் செய்வார்.

சுற்றுப்பயணத் திட்டத்தை நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி வகுத்துப் பின்னர் விவரமாக அறிவிப்பார்.

மாநில மாநாட்டு நிதி தந்து கூட்டம் அமைத்துக்கொள்ளும் தோழர்கள், தோழர் கே. வி. கே. சாமி அவர்களோடு தொடர்புகொள்ளவும்.

'அறிவகம்' சென்னை 28–7–55 } பொறுப்பாளர், தி.மு.க. தலைமைக் கழகம்.

தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டி

பி. ஏ. பார்ப்பனர் ஒருவரின் பித்துக்குளித்தனம்!

குடந்தை வட்டத்தில் உள்ள பிள்ளையாம்பேட்டை (அம்மா சத்திரம் அருகில்) இராஜுவத் தெருவில், தீண்டாமைச் சுவரொட்டி வைக்கப்பட்டிருந்தது அவ்வூரிலுள்ள அப்பு என்கிற ரெங்கசாமி அய்யங்கார், 31-7-55 இரவு, சுவரொட்டியை கிழித்தெறிந்துள்ளார். அங்கிருந்த இளைஞர் ஒருவர் இதைக் கண்டுபிடித்து, புத்தி கற்பித்து அனுப்பியுள்ளார்; மேலும், உடனே கழகத் தோழர்களால் சுவரொட்டி பல இடங்களில் ஒட்டப்பட்டது. மேற்படி பார்ப்பனர் ஒரு பி. ஏ. பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (க. கி.)

இந்தியைகட்டாயமாக்குவது அறிவுக்குகந்ததல்ல!

மைசூர் சட்டசபைத் தலைவர் கூறுகிறார்

"கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியைக் கட்டாய மொழி பாடமாக ஆக்காமலிருப்பது தான் நன்மையுடையது—அறிவுக்குகந்தது — வரவேற்கத்தக்கது; ஏனென்றால், கட்டாயம் செய்து இந்தியைப் படிக்கவைப்பது 'வெறுப்பை'யே உருவாக்கும்"

இவ்வாறு, மைசூர் சட்டசபை (மேல் சபை) தலைவர் கே டி. பாஷ்யம், இந்தி மொழியைக் கட்டாய மொழி பாடமாக ஆக்குவது பற்றி தமது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

"பொது மக்கள், இந்தியை விரும்பிப் படிப்பதாக இருந்தால் மட்டுமே இந்தி மொழி பரவ வழி ஏற்படும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"ஆனால் ஆங்கில மொழியோ, இன்று எல்லா இடங்களிலும் வழக்கத்தில் இருந்துவரும் ஒரு 'அகில உலக' மொழியாகும்; எனவே, ஆங்கில மொழியை பாட மொழியினின்றும் அகற்றி விடாமல் இருப்பது மிக மிக அவசியமாகும்,"

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

குடிதண்ணீருக்கு செலவிட்ட தொகை

சென்னை மாநில சர்க்கார், 1953—55 ஆகிய இரண்டாண்டு காலத்தில், கிராமாந்திரக் குடிதண்ணீர் வினியோக வசதிக்காக ரூ 67,96,501 செலவழித்திருக்கிறதாம். இத்தகவலை, சென்னை மாநில சுகாதார அமைச்சர் ஏ. பி ஷெட்டி, சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

பாடப் புத்தகங்களை சர்க்கார் வெளியிடலாமா?

ஆராய குழு நியமிக்கிறது ஆந்திர சர்க்கார்

'சர்க்காரே, பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களை வெளியிட வேண்டும்,' என்று, 'குப்புசாமி விசாரணைக் குழு' செய்துள்ள சிபாரிசு குறித்து கருத்தறிவிக்க, வெங்கடேசுவரா பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ். கோவிந்தராஜுலுவைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை ஆந்திர சர்க்கார் நியமித்துள்ளனர்.

இந்தக் குழு, 'ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள பாடப் புத்தகங்களை வைத்துக் கொள்வதா?—புதிதாகப் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதா?— அப்படியானால், யார் அந்தப் புத்தகங்களை வெளியிடுவது?' — என்பன போன்றவற்றையும் கண்டறிந்து கூறும்.

"மாநிலமெங்கணும், புத்தகங்கள் ஒரேமாதிரியாக இருப்பதற்கு வழி செய்யும் வண்ணம் சர்க்காரே துவக்கக் கல்வி நிலையிலும், அதை அடுத்த நிலைகளிலும் புத்தகங்களை வெளியிட வேண்டும்," என்று, ஆரம்பக் கல்வி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குப்புசாமி குழு சிபாரிசு செய்திருந்தது நினைவிருக்கலாம்.

அணுசக்தி மாநாடு

84 நாடுகளின் விஞ்ஞானிகள் கலந்துகொள்கின்றனர்

ஆக்கத் துறைகளில் அணுவின் ஆற்றலைப் பயன்படுத்துவது பற்றி ஆராய, ஆகஸ்டு 8-ந் தேதியன்று, ஜினீவா நகரில், விஞ்ஞானிகளின் அணுசக்தி மாநாடு நடைபெறப் போகிறது.

அணுசக்தியினால் நன்மை விளைவதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்னும் உயரிய கருத்து கொண்டு மாநாடு ஏற்பாடாகியிருக்கிறது. சிறப்பாக, அணுசக்தியை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்தல், வைத்தியம், உயிர் நூல், அடிப்படை விஞ்ஞானம் ஆகியவைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றி இம்மாநாடு ஆராயும்.

இம்மாநாட்டுக்கு 84 நாடுகளை அழைத்திருக்கிறார்கள்; இவற்றுள் 60, ஐக்கிய நாடுகளில் சேர்ந்திருப்பவை; மற்றவை, உலக சுகாதார நிறுவனம், உணவு விவசாய நிறுவனம் என்பவை போன்ற ஐ. நா. வினைக் கழகங்களில் மட்டும் இருப்பவை.

இம்மாநாட்டில்—பெரிய நாடுகளோடு சிறிய நாடுகளும், முதிய நாடுகளோடு இளைய நாடுகளும், தொழில்வளம் சிறந்த நாடுகளோடு தொழில் வளம் குறைந்த நாடுகளும் ஒருங்கு சேர்ந்து ஆராய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

உங்கள் குறிப்புக்கு!

பக்ரா-நங்கல் திட்டச் செலவு

பக்ரா-நங்கல் திட்டத்திற்கு 1946-ம் ஆண்டில் செய்யப்பட்ட முதல் மதிப்பீடு ரூ 75 கோடி; 1949-ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 133 கோடி; 1951-52-ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 151 கோடி; 1954-ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ 158 88 கோடி.

எஞ்சின்கள் நன்கொடை

கொழும்புத் திட்டத்தின் கீழ், கனடா, இந்தியாவுக்கு 120 எஞ்சின்களை நன்கொடையாக அளிக்கிறது. இந்த உதவித் திட்டத்தின் கீழ், 56 பாய்லர்கள் ஏற்கனவே இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது.

கொய்னா உற்பத்தி

சென்னை மாநிலத்திலுள்ள ஆனைமலையிலிருக்கும் கொயினா உற்பத்திச்சாலையில், ஆண்டுதோறும் 60,000 பவுண்டு கொயினா சல்பேட்டும், 30,000 ராத்தல் கொயினா காய்ச்சல் மருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியா முழுவதிலும் ஆண்டுதோறும் 1,40,000 ராத்தல் கொயினா உற்பத்தியாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தி திணிக்கப்படவில்லை என்பது பித்தலாட்டமே!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"மத்திய அரசாங்கத்தில் ஊழியம் புரிந்துவரும் இந்தி வழங்கப்படாத பகுதி மக்கள் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென விதி இயற்றப்பட்டிருக்கிறது. இந்தி வழங்கும் பகுதியிலிருந்து, இந்தி வழங்கப்படாத பகுதிக்கு அரசாங்க ஊழியம் புரியவரும் அதிகாரிகளின் தன்மை குறித்து நான் அறிய அவாவுறுகிறேன். எனவே, தமிழ் பகுதி போன்ற இந்தி வழங்கப்படாத பகுதிகளுக்கு பணி புரியவரும் மத்திய அரசாங்க ஊழியர்கள், எந்த மக்களிடை சேவை செய்ய வருகிறார்களோ, அந்த மக்களுடைய மொழியை மட்டுமாவது தெரிந்திருப்பவர்களாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததல்லவா? இப்பிரச்சினையில் அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது."

"இந்தியை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், 'எந்த ஒரு மாநிலத்திற்கும் ஆட்சி மொழியாக அது இருந்தாக வேண்டும்,' என்ற கருத்துக்கே இடமில்லை. இப்பிரச்னை, பல மொழி வழங்கும் சென்னை மாநிலத்தில், வெளிநாட்டாரால் தீர்த்துவைக்கப்பட்டிருக்கும் முறையை, அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். துவக்க முறையாக இருந்தபோதிலும்கூட, இங்கு பணி புரிய வரும் ஆங்கிலேயர்கள், இங்கு வழங்கும் மொழியில் தேர்வு பெற்றாக வேண்டும்."

"இந்திய அரசியல் சட்டம் 16-வது விதி, விருப்பமான பணி புரிவதற்கும், அரசாங்க உத்தியோகம் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை அளிக்கிறது. இந்தியைக் கட்டாயப்படுத்தும் புதிய விதி, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளில் கலந்துகொள்ள, அனைவருக்கும் அந்த வாய்ப்பை அளிக்கிறதா என்று கேட்கிறேன். அரசியல் சட்ட விதிப்படி 1965-ம் ஆண்டு வரை ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டும் அரசாங்க மொழிகளென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன; அந்தக் கால கெடுவை மக்கள் சபை கூட்டவும் செய்யலாம்."

"எனவே, இதுபற்றி இந்திய அரசாங்க உள்நாட்டுத் துறை அனுப்பிய சுற்றறிக்கை, அரசியல் சட்ட விதிகளுக்கு முரண்பாடுடையதாகிறது."

"தென் ஆப்பிரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில், இரண்டும்—இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி ஆகிய மூன்று மொழிகளை சுவிட்சர்லாந்து ஒப்புக் கொண்டுள்ளது; ஒரு நாட்டின் ஒற்றுமைக்கும்—மொழிக்கும் ஒருவிதொடர்பும் கிடையாது."

"இந்தி பயிற்றுவிக்கப்படுவதையோ, இந்தி பயில மக்களுக்கு, வாய்ப்பு தரப்படுவதையோ நான் எதிர்க்கவில்லை; ஆனால், அரசாங்கப் போக்கில் ஒருமைப்பாடு இருக்கவேண்டும் என விரும்புகிறேன்."

"பள்ளிகளிலிருந்து ஆங்கிலத்தை அவர்கள் விலக்கவேண்டுமென விரும்புவது, 'தங்களுக்குப் புறம்பான ஒரு மொழியை மாணவர்கள் கற்பது இயற்கையாகாது' என அவர்கள் உணர்வதினாலேயாகும்."

"தமிழ், கேரளம், ஆந்திரம் ஆகிய நாடுகளின் சிறார்களுக்கு, ஆங்கிலத்தைப் போன்றே இந்தியும் அந்நியமான மொழியல்ல எனக் கொள்ளுவதற்கு, ஏதாவது காரணம் இருக்கிறதா? இம்மாநிலத்தில் எந்தவிதக் குழப்பமும் வளர்ந்து செல்லாத நிலையில், இம்மொழிப் பிரச்சினை, திட சித்தத்துடன், இம்மாநில அரசாங்கத்தால் தீர்க்கப்படவேண்டும்."

—இவ்வாறு, சென்னை மேல் (சட்ட) சபையில், கவர்னர் உரை மீது நடைபெற்ற விவாதத்தின்போது, சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தரும், எதிர்க்கட்சித் தலைவருமான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இந்தி கற்றுக் கொள்வதற்கு எல்லா சந்தர்ப்பங்களும் தரப்பட வேண்டுமென்ற வாதம் எனக்குப் புரியத்தான் செய்கிறது;

"சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், சுமார் 50 அல்லது 60 கல்லூரிகளில் இந்தி இஷ்டப் பாடமாக இருக்கிறது; இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளும் வசதி கல்லூரி இடைநிலை வகுப்பு, 'பி. ஏ.' வகுப்புகளில் மட்டுமின்றி, உயர்தரப் பரீட்சைகளுக்கும் கூடக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது; எனவே, இந்தி மொழி அறிவு பெறுவதற்கு எந்தவித விரோதமும் இங்கு காட்டப்படவில்லை என்பது உணரப்பட்டாக வேண்டும்; ஆனால், இந்திமொழி நம்மீது கட்டாயமாகத் திணிக்கப்படும் போதுதான், 'இது நியாயந்தானா?' என்று நாம் கேட்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

"பண்டித நேரு, பிரதமராயிருக்கும் வரையில், இந்தி மொழி பற்றி எந்தவிதத் தவறுகளும் நடைபெறாது என்று நான் நம்புகிறேன்."

சாதி இந்துக்கள்—தாழ்த்தப்பட்டோர் மோதுதல்

வேலூர்—விருதம்பட்டு சேரியில் சாதி இந்துக்களெனப்படுவோருக்கும் — தாழ்த்தப்பட்டோருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாம்.

களிஞ்சூரைச் சேர்ந்த சாதி இந்து ஒருவரின் பிரேதம் சேரி வழியாக எடுத்துச் செல்லப்பட்டபோது, 'ஷெட்யூல்ட் வகுப்பு சங்க'த்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் சிலர், பிரேதம் சேரி வழியாகச் செல்கையில், 'கொட்டு மேளம்' வாசிக்கக் கூடாது என்று தடுத்தனராம்.

இதையொட்டி ஏற்பட்ட கைகலப்பில், சாதி இந்துக்களெனப் படுவோரில் நால்வருக்குக் காயமேற்பட்டதாம்; ஆறு தாழ்த்தப்பட்டோரெனப்படுவோர், கைது செய்யப்பட்டனராம்.

உதவி போலீஸ் அதிகாரி சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று நிலைமையைச் சரி செய்தாராம்.

புனர்வாழ்வு நிதி நிர்வாக நிறுவனம், இடம் பெயர்ந்தவர்களுக்குக் கடன் உதவியாக 1955 மே 31-ந் தேதிவரை, மொத்தம் ரூ 9,56,59,000 விநியோகித்திருக்கிறது.

இந்தியைத் திணிக்க...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டாக வேண்டும்;

"தென்னாட்டின் மீது இந்தியைத் திணிக்க, அவர்கள் ஒரு தந்திரமான வழியைக் கையாளுகின்றனர்;

"போட்டிப் பரீட்சைகளில் தென்னாட்டு இளைஞர்கள் கலந்துகொள்ள முடியாத வாறு செய்கிற ஒரு கொள்கையை இந்திய சர்க்கார் கடைப்பிடிக்கக் கூடாது;

"இந்தியை ஒரு விருப்ப மொழியாக ஏற்றுக்கொள்வதில் எனக்கொன்றும் தடையில்லை; ஆனால் இந்தி, போதனை மொழியாகவோ, பரீட்சை மொழியாகவோ ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது;

"வட்டார மொழியிலும், இந்தி மொழியிலும் நாம்கொண்டுள்ள ஆர்வத்தினால், ஆங்கில மொழியின் மதிப்பையும் நாம் மறந்து விடலாகாது,"

என்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம் நாராயணசாமி எம். எல். சி., அவர்கள், சென்னை மேல்சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், குறிப்பிட்டார்:—

"தொழில் துறையில் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது; இந்தக் குறையை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் போக்க சென்னை சர்க்கார் முன்வர வேண்டும்."

இலங்கை இந்தியர் பிரச்சினையைக் குறிப்பிட்டு, "அதற்கு ஒரு சாதகமான முடிவு தேடவேண்டும்," என்றார்.

'இந்தியைக்கூட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை, எல்லோருக்கும், குடியரசுத் தலைவர் முதல் சாதாரண மாணவர்கள் ஈறாக, விளக்கிவிட்டனர்.

"அரசியல் நிர்ணயசபை ஒரு மொழியை ஏற்றுக்கொண்டுவிட்டது; அது எந்த மொழி என்பது குறித்துக் கவலை இல்லை; உண்மையில் அந்த ஒரு மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது, இதர மொழியினர், தங்கள் தங்கள் மொழி அழிந்து விடாமல்—அவதியுறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தூண்டியிருக்கிறது.

"தமிழ் மொழி பிரச்சாரத்தின் அவசியம் குறித்து இதற்குமுன் நாம் அதிகம் கேள்விப்பட்டதில்லை; தமிழ் மொழியில் மண்டிக்கிடக்கும் அழகும், ஆற்றலும் குறித்து இன்றுபோல் அப்போது நாம் கேள்விப்படவில்லை;

"இந்தியாவெங்கணுமுள்ள பல மொழி பேசும் மக்களும் தங்கள் தங்கள் மொழியினைப் போற்றத் துவங்கியிருக்கின்றனர்; இது சரியானதே! ஏனெனில், அந்தந்த மொழி பேசுவோருக்கு அவை, பயன் மிகத் தரக்கூடியனதாம்."

சுயாட்சி கோரிக்கைக்கு வெள்ளையர் மறுப்பு

உடனடியாக சுயாட்சி வழங்க வேண்டுமென்ற சிங்கப்பூர் சட்டசபையின் கோரிக்கையை, இங்கிலாந்தின் காலனி மந்திரி லென்னாக்ஸ் பாய்ட் நிராகரித்துவிட்டார் எனக் கூறப்படுகிறது.

காலனியின் முதன் மந்திரியான மார்ஷலின் கோரிக்கைகளுக்கு, பாய்ட் அனுதாபம் காட்டுவதாகவும், ஆனால், அரசியல் சட்ட விஷயங்களில் கவர்னர் 'பிளாக்'கின் கொள்கையையே ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வாரத்தில், கவர்னர், மேலும் நான்கு 'ஜூனியர்' மந்திரிகளை நியமித்துக்கொள்ள அனுமதி மறுத்தபோது, முதன் மந்திரி மார்ஷல் ராஜினாமாச் செய்துவிடுவதாகக் கூட அச்சுறுத்தினார் என்பதும் நினைவிலிருக்கலாம்.

கே. எஸ். பாண்டியன் படிப்பகம் (திருவல்லிக்கேணி) 2-ம் ஆண்டு விழா

★

7—8—55 மாலை 5 மணிக்கு

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர்: காஞ்சி-கல்யாணசுந்தரம்

பேசுவோர்: தி. என். அண்ணாதுரை, பி. ஆர். கோகுலகிருட்டிணன்

இசை: இரா. சண்முகம்

குறிப்பு: கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (மயிலாப்பூர்)

(50-வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழா)

கபாலி டாக்கீஸ் எதிரிலுள்ள மைதானத்தில்

6—8—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: பொன்-கு. கோதண்டபாணி

பேசுவோர்: சி. பி. சிற்றரசு, கண்ணதாசன்

★

சேலம்

விமானம் ரோடு புத்துமாரியம்மன் கோவில் பாண்டியன் தெருவில்

7—8—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: பி. என். அம்மச்சி

பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சிற்றுளி ஏ. சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருட்டிணன்

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

★

ஆக. 6: விழுப்புரம்
7: துறையூர்
8: கவுந்தப்பாடி.
9: தஞ்சை

திருக்குறள் வகுப்பு

6—8—55 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை, பெத்து நாய்க்கன்பேட்டை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். 'குற்றம் கடிதல்' என்பது குறித்து, திரு. மயிலை சிவமுத்து, திருமதி ஜெகதீஸ்வரி ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

6—8—55 சனி மாலை 6-30 மணிக்கு, எண். 59, மன்னார்சாமி கோயில் தெருவிலுள்ள (இராயபுரம்) வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் என் ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில், 'குறள் நெறியும் — அருள் நெறியும்' என்பது பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

பெண்களின்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தலைவரான ஆ. எல். என் டோரா குறுக்கிட்டு, 'உறுப்பினர் அனுமதித்தால்தான் பேசலாம்,' என்று கூறியிருக்கிறார்.

உறுப்பினரோ அனுமதிக்க மறுத்துவிட்டார்; அம்மண்ண ராஜா 'பெண்களிடம் கருணை காட்டவும் மறுக்கிறார்களே' என்று முணுமுணுத்துக்கொண்டு தன் இடத்தில் உட்கார்ந்துவிட்டார்.

பின்னர் அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தரப்பட்டபோது, அந்தப் பெண்மணி, "அலங்கரித்துக்கொள்வது பெண்களின் பிறப்புரிமை" என்று கூறி, பெண்கள் க்ஷேம நல அதிகாரிகள் மிகக் கடினமாக உழைப்பதாகக் கூறினார்.

சென்னை தி. மு.(கிளை) கழகங்களுக்கு

"7—8—55 பிற்பகல் 2 மணிக்கு, இராயபுரம் 'அறிவகத்'தில், ஓர் அவசரக் கூட்டம் நடைபெறும். சில முக்கிய விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட வேண்டியிருப்பதால், கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்ட உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

திருச்சி மாவட்ட தி.மு.கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"7—8—55 பிற்பகல் 3 மணிக்கு, துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில், திருச்சி மாவட்ட செயற்குழுக் கூட்டம், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் நடைபெறும். பொருள்: மாநில மாநாட்டு நிதி வசூல்; வரவு-செலவு; புதிய கழகங்கள் பதிவு; வட்டக்குழு அமைப்பு; பொதுக்குழு உறுப்பினர் தேர்தல்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

தஞ்சை மாவட்ட தி.மு.க. வட்டச் செயலாளர்கட்கு

"தஞ்சை மாவட்ட தி.மு.கழக வட்டச் செயலாளர்களின் ஆலோசனை கூட்டம், 7-8-55 காலை 9 மணிக்கு, மாயூரம் டிராவலர்ஸ் பங்களாவில் நடைபெறும்.

* * *

மாயூரம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

"மாயூரம் தி. மு. கழகத்தில் ஏற்பட்டிருக்கிற சில நிலைமைகளைப் பரிசீலிக்கவும், முடிவு எடுக்கவும், 7—8—55 காலை 10 மணிக்கு, மாயூரம் டிராவலர்ஸ் பங்களாவில், மாயூரம் தி. மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்."

* * *

காரைக்கால் வட்ட தி.மு.க. கிளைச் செயலாளர்கட்கு

'காரைக்கால் வட்டக் குழுக் கூட்டம், 7—8—55 மாலை 5 மணிக்கு, காரைக்கால் கழகப் பணிமனையில் நடைபெறும்,"

—என, தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ் இளங்கோ அறிவிக்கிறார்.

முத்தமிழ் விழா

குன்னூர் (நீலகிரி) தி. மு. கழக நிதிக்காக, குன்னூர் கணேஷ் டாக்கீசில் 7—8—55ல் முத்தமிழ் விழா நடைபெறும்.

பகல் 2 மணிக்கு, நாகூர் அனீபா குழுவினரின் இன்னிசை.

மாலை 5 மணிக்கு, தோழர்கள் என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவுகள்.

இரவு 10 மணிக்கு, பகுத்தறிவு நாடக மன்றத்தார் நடிக்கும் 'பரப்பிரம்மம்' நாடகம் நடைபெறும்.

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணா 12.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.